Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

உங்கள் வியாபாரம்
சிறக்க ஈழநாதத்தில்
விளம்பரம்
செய்யுங்கள்.

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

Eezhanatham

நாதம் 01 திருவள்ளுவர்ஆண்டு 2035 புரட்டாதி 18 04.10.2004 திங்கட்கிழமை ஓசை 131

## வாகரைப் பிரதேசத்தில் கருணாகுழு மீது தாக்குதல்
## இருவர் பலி! ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன
### மட்டு. அம்பாறை அரசியல்துறை அறிவிப்பு

(நமது நிருபர்

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் தேசவிரோதக் கும்பலொன்றின் மறைவிடம் மீதான தாக்குதலின் போது, ஆயுதங்களும் இராணுவத் தளபாடங்களும் தங்களால் கைப்பற்றப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட அரசியல்த்துறை நேற்று அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை வாகரைப் பிரதேசம் மதுரங்குளம் ஓமடியாமடுவில் இடம் பெற்ற அதிரடி நடவடிக்கை தொடர்பாக அறிக்கையொன்று விடுதலைப் புலிகளினால் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு, நேற்று சனிக் கிழமை காலை 6.15 மணியளவில் வாகரை ஓமடியாமடுவில் தேசவிரோதக் கும்பல்களில் ஒன்றான கருணா குழு மீது

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மதுரங்குளம் பிரதேசத்தில் இளம் குடும்பஸ்தர் பலி!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை மதுரங்குளம் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலிசார் தெரி வித்தனர்.

ஓமடியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதான தம்பி ஐயா மன்னவன் என்பவரே பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

இச்சம்பவம் தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை மாலை வாழைச் சேனைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

# தமிழர் தாயகத்தின் மனித உரிமை மீறல் குறித்து ஜெனிவாவில் கலந்துரையாடல்!

## புலிகளின் அரசியல் விவகாரக்குழு மனித உரிமை குழு சந்தித்தன.

(நமது நிருபர்)

**சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் விடுதலைப் புலிகளின் அர சியல் விவகாரக்குழுவினரும், தமிழீழ தாயக மனித உரிமைகள் குழுவினரும் சுவிஸ் நேரப்படி நேற்று காலை 9.30 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.**

இக்கலந்துரையாடலில், தமிழர் தாயகப்பகுதிகளில் இனம் காணப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டது. சுவிஸ் நேரப்படி நேற்று முற்பகல் முதல் பிற்பகல் வரை நீண்ட கலந்துரையாடல் ஒன்றை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் நடத்தவுள்ளனர்.

இதேவேளை, விடுதலைப்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## வாகரைப் பிரதேசத்தில் நால்வர் பலியானதாக தெரிவிப்பு!

(நமது நிருபர்)

வாகரைப் பிரதேசத்தில் சனிக்கிழமை அதிகாலை தேசவிரோதக் கும்பல் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் நால்வர் பலியாகியுள்ளதாக மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றன.

இருவர் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட போதும் மேலும் இருவர் பலியாகி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

### முற்பணம் வஞ்சு சேரமையினால்
## ஏறாவூர்பற்று பாடசாலைகளில் மதிய உணவு வழங்கல் நிறுத்தம்

(செங்கலடி நிருபர்)

ஏறாவூர்ப்பற்று கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்கள் பல்வேறு பிரச்சினைகளையும், சிரமங்களையும் எதிர்நோக்குவது காரணமாக உணவு வழங்கலை நிறுத்தியிருப்பதாக பாடசாலை அதிபர்கள் மட்டக்களப்பு உலக உணவு நிகழ்ச்சித் திட்ட பொறுப்பாளருக்கு ஏறாவூர்ப்பற்று கல்விக் கோட்ட அதிகாரி ஊடாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஏறாவூர் பற்று கல்விக் கோட்டத்திலுள்ள 24 பாடசாலைகளின் அதிபர்கள் கையொப்பமிட்டு உலக உணவு நிகழ்ச்சித்திட்ட பொறுப்பாளருக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# மட்டு.எம்.பிக்கள் ஜெயா, அரியம் கொலை மிரட்டல்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஜெயானந்தமூர்த்தி, பா. அரியநேத்திரன் ஆகிய இருவருக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று கிரான் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கும் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள வேண்டாம் என தொலைபேசியில் இருவருக்கும் இனந்தெரியாத நபர்கள் எச்சரிக்கை விடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இக்கொலை அச்சுறுத்தலையடுத்து இன்று கிரானில் நடைபெறும் பரிசளிப்பு விழா நிகழ்வில் கலந்து கொள்வதை தவிர்த்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பா.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## சம்பள அதிகரிப்பினை வலியுறுத்தி மலையகத்தில் மக்கள் போர்கொடி




(நமது நிருபர்)

மலையக தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு உட்பட இரு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று ஹற்றன் நகரில் நடைபெற்ற பேரணியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள்.

மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அதன் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் தலைமை

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## பெண்டுகள் சேனையில் பலியானவரின் சடலம் உறவினரிடம் ஒப்படைப்பு

(நமது நிருபர்)

பெண்டுகள்சேனைப் பகுதியில் விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்த நபரின் சடலம் நேற்று அவரது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

தேசவிரோத நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொருட்டு ஊடுருவிய இக்கும்பல் மீது விடுத

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## விபத்தில் சிக்கி வயோதிபர் பலி!

(கணன்)

திருக்கோயில் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துவிச்சக்கர வண்டி விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருக்கோயிலைச் சேர்ந்த சிவலிங்கம் (53) என்பவரே மரணமானவராவார். தனது துவிச்சக்கர வண்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

### இன்றைய நாளில் தகவல்துளி

தமிழ்நாட்டு சுதந்திர வீரர் சுப்பிரமணியம் சிவா பிறந்த நாள்

பெல்ஜியம் சுதந்திர தினம் (1830)

## செய்தித் துளிகள்

### சிறுவர் தின நிகழ்வு

(நமது நிருபர்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான பல்வேறுபட்ட விளையாட்டு நிகழ்ச்சிகள் கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயற்திட்ட அதிகாரி கலைவர்ணன் தலைமையில் திருமலை சில்வர் ஸ்டார் விடுதி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறுவர்களின் விசேஷ நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றன.

இந்நிகழ்வினை முன்பள்ளி சிறுவர் மேம்பாட்டு நிறுவனமும், திருமலை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

### சிரமதானம்

(பூ.பிரசாந்தன்)

உலக சமாதான சிறுவர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட பவ்ரல் அமைப்பு அண்மையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மாபெரும் சிரமதானப் பணியொன்றினை மேற்கொண்டது.

இப்பணி மூலம் வைத்தியசாலையில் உள், வெளிப் பகுதிகள் துப்பரவு செய்யப்பட்டன. இச்சிரமதானப் பணியில் பவ்ரல் அமைப்பைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

### ஆசிரியர் தின விழா

(நமது நிருபர்)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அரசடித்தீவு விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 06 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு ஆசிரியர் தின விழா நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் த.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஆசிரியர் கௌரவிப்பு மற்றும் மாணவர்களின் பல்வேறுபட்ட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

### பாடசாலைப்பைகள் வழங்கல்

(கணன்)

இந்துசமய அபிவிருத்திச் சபையின் அனுசரணையோடு அம்பாறை மாவட்டத்தில் கடந்த கால வன்செயலினால் பாதிக்கப்பட்ட மிகவும் பின் தங்கிய வறிய நிலையிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை புத்தகப் பைகள் வழங்கும் நடவடிக்கையினை அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் மேற்கொண்டு வருகின்றது.


எதிர்வரும் 10 ஆம் திகதி மல்வத்தை, வளத்தாப்பிட்டி போன்ற பிரதேசங்களில் வதியும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும், 11 ஆம் திகதி சாகாமம், காஞ்சிரங்குடா, கஞ்சிகுடியாறு, தங்கவேலாயுதபுரம் போன்ற கிராமங்களில் அறநெறிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது. 5ம் ஆண்டுக்கு உட்பட்ட சுமார் 350 மாணவர்களுக்கு இப்பாடசாலைப் பைகள் வழங்கப்படவுள்ளது.

### திறந்து வைப்பு

(நமது நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நிர்வாகக் கட்டடம், மற்றும் நோயாளர்களுக்கான சிகிச்சைப் பிரிவும் அண்மையில் கிழக்குமாகாண அபிவிருத்தி உட்கட்டமைப்பு அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவினால் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 75 கோடிரூபா செலவில் நவீன வசதிகளைக் கொண்டு இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.



# தேசியத் தலைவரின் பன்முக ஆளுமையை சித்தரிக்கும் நூல் வெளியீடு

(நமது நிருபர்)

**தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் பன்முக ஆளுமையைச் சித்தரிக்கும் ஆங்கில நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சுவிற்சர்லாந்தில் பேரெழுச்சியுடன் நடைபெற்றது. rabakaran a leader for all seasons எனும் இந் நூல் வெளியீட்டு விழா, சுவிஸ் பேர்ண் நகரில் மண்டபம் நிறைந்த மக்களுடன் நடைபெற்றது.**

சுவிஸ் நேரம் நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் இவ்விழா ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக, தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ காவல்த்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றிவைத்தார். சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவைச் சேர்ந்த அல்பிரட் தலைமையில் நடந்த இந் நிகழ்வில், சிறுவர் - சிறுமியரின் கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து உரைகளை, தமிழீழ நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மட்டு. அம்பாறை அரசியல்த்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன், தமிழீழ காவல்த்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் நேரு.குணரட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர்.

மண்டபம் நிறைந்த மக்களுடன் பேரெழுச்சியுடன் நடைபெற்ற இந் நிகழ்வில், தமிழீழ காவல்த்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நூலின் முதல் பிரதியை வெளியிட்டு வைத்தார். இந்நூல் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பன்முக ஆளுமையைச் சித்தரிக்கும் அதிக ஒளிப்படங்களை தாங்கி வெளிவந்துள்ளது. நூல் வெளியீட்டு விழா நடைபெற்ற அதேவேளை, நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக ஜெனிவா நகரில் விடுதலைப் புலிகளின் குழுவினர் இடைக்கால தன்னாட்சி வரைவு தொடர்பான கலந்துரையாடலை நடாத்தியுள்ளனர்.

# சந்திரிக்காவின் ஆலோசனை சபை ஆராய ஹக்கீம் சந்தர்ப்பம் கோருகிறார்

(நமது நிருபர்)

உத்தேச சமாதான நல்லெண்ண தேசிய ஆலோசனை சபை பற்றி பேசுவதற்கு சந்தர்ப்பம் தருமாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவைக் கேட்டுள்ளார்.

இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவினால் அமைக்கப்படவிருக்கும் உத்தேச ஆலோசனை சபை கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் நள்ளிரவு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் உயர்பீடம் கூடி ஆராய்ந்தது.

இதில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய அக்கட்சியின் தலைவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடித த்தில் இந்த சபையின் செயல்பாடு பற்றி போதிய விளக்கமில்லாது இருப்பதால் அது பற்றிய விளக்கம் தேவை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி நேரில் பேச வேண்டியிருப்பதால் அதற்கான சந்தர்ப்பத்தை தருமாறு கேட்டுள்ள அவர், இது பற்றிய தெளிவான விளக்கம் பெற்ற பின்பே இந்த சபை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொள்வது பற்றியோ அல்லது அதில் அங்கம் வகிப்பது பற்றியோ தங்களால் தீர்மானிக்க முடியும் என்றும் அக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ் மாவட்ட மீனவர்களை தமிழகத்துக்கு வருமாறு அழைப்பு

(நமது நிருபர்)

இந்திய தமிழ்நாட்டு இராமேஸ்வரம் மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள், யாழ் மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகளை தமிழ்நாட்டிற்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

தற்போது யாழ் மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள, தமிழ்நாடு இராமேஸ்வரம் மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகளான கே.அருளானந்தம் மற்றும் எஸ்.பாலசுப்ரமணியம் ஆகியோர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில், வட மாகாண மீனவர் கூட்டுறவுச் சங்கப் பிரதி நிதிகளுடன் சந்திப்புகளை மேற்கொண்ட இவர்கள், வடமராட்சி பிரதேச மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனப் பிரதி நிதிகளை சந்தித்தனர்.

குறிப்பாக தமிழ்நாட்டு மீனவர்களின் இழுவைப் படகுகள் தமது கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசிப்பதால் தமக்கு ஏற்படும் தொழில் ரீதியான பாதிப்பு பற்றி யாழ் மாவட்ட மீனவர்கள் சுட்டிக் காட்டி, இந்த அத்துமீறல்கள் தவிர்க்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி வலியுறுத்தினர்.

இதனை ஏற்றுக்கொண்ட தமிழ்நாட்டு மீனவர் சங்கப் பிரதிநிதிகள் இது பற்றி தமது மீனவர்களுக்கு விளக்கமளிப்பதற்காக யாழ் மாவட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் தமிழ்நாட்டிற்கு வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

# விடுதலைப் புலிகளின் மனித உரிமை செயலகக் குழு யோசப் எம்.பி.தலைமையில் ஜெனிவா சென்றது

(நமது நிருபர்)

தற்போது ஜெனீவாவில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் இணைந்து கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் 8 பேர் கொண்ட குழுவொன்று நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து ஜெனிவாவிற்கு புறப்பட்டுள்ளது.

இக் குழுவில் விடுதலைப் புலிகளின் மனித உரிமைகள் செயலகத்தின் இணைப்பாளர் வண.பிதா பீ.கருணாரத்னம் உறுப்பினர்கள் சட்டத்தரணி கா.சிவபாலன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வைத்திய கலாநிதி கே.சிவபாலன் ஆகியோரும் இடம் பெற்றுள்ளார்கள்.

குறிப்பாக இப் பிரதிநிதிகள் மனித உரிமைகள் தொடர்புடைய பல்வேறு அமைப்புக்களின் பிரதி நிதிகளையும் சந்திப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.



சிறுவர் தினத்தை முன்னிட்டு அண்மையில் மட்–தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மட்– இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடாத்திய சிறுவர் விளையாட்டு விழாவில் மட்– தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் கு.தேவராஜா உரையாற்றுவதையும் சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வையும் படத்தில் காணலாம். (படமும் தகவலும்:–கிரிஜா)

# அக்கரைப்பற்று பகுதியில் மினி சூறாவளி மீள்குடியேற்றக் கிராமகுடிசைகள் நாசம்

(வி.பி.சிவப்பிரகாசம்)

**கடந்த சில தினங்களாக அம்பாறை மாவட்டத்தில் மாலை வேளைகளில் பரவலாகபலத்த காற்றோடு கூடிய நல்ல மழை பெய்து கொண்டு வருகிறது. அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் மினி சூறாவளியுடன் கூடிய மழையினால் மீள்குடியேறிய குடும்பங்களின் அதிகமான குடிசைகள் நாசமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.**

அக்கரைப்பற்றுப்பகுதியில் இசங்கண்ணிச்சீமை என்னும் இடத்தில் மீள்குடியேறிய குடும்பங்களின் தகரக்கொட்டில்களின் கூரைகள் இந்த மினி சூறாவளியினால் சேதமடைந்துள்ளதாகவும் சம்மந்தப்பட்டவர்கள் அவர்களின் உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளதாகவும் அக்கரைப்பற்றுப் பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.இதே போன்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் மீள்குடியேறிய புளியம்பத்தை, சாந்திபுரம், அளிகம்பை ஆகிய இடங்களில் பல குடிசைகள் சேதமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி 30 குடிசைகள் சேதமடைந்துள்ளதாகவும், இந்தக் குடிசைகள் தகரத்தினால் அமைக்கப்பட்டவைகள் என்றும், அளிகம்பைப் பகுதியில் அமைக்கப்பட்ட வீடுகளின் சுவர்களும், தூண்களும் சேதமடைந்துள்ளதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கிறார்கள்.

மேலும் பலத்த இடிமின்னலுடன் கூடிய மழை பெய்தமையினால் சாகாமப் பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த பசுமாடுகள் இரண்டு மின்னல் தாக்குதலில் இறந்துள்ளதாக சம்மந்தப்பட்டவர்கள் பிரதேச செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

## தரம் 5 புலமை பரீசில் பரீட்சையில் மருதமுனைப் பிரதேசத்தில் 47 மாணவர்கள் சித்தி

அண்மையில் வெளியான இவ்வாண்டிற்கான (2004) 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில்பரீட்சை பெறுபேறுகளின்படி மருதமுனைப் பிரதேசத்திலுள்ள 4 பாடசாலைகளிலிருந்தும் 47 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அல்மனார் மத்திய கல்லூரி மாணவன் எம்.ஏ.அம்ஸர் 164 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 6ம் இடத்தையும், ஸம்ஸ் மத்திய கல்லூரி மாணவன் கே.அன்ஸத் அஹமட் 163 புள்ளிகளைப்பெற்று மாவட்ட மட்டத்தில் 9ம் இடத்தையும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

# வட்டமடு காணிப் பகுதியை அதிகாரிகள் பார்வையிட நடவடிக்கை

(வி.பி.சிவப்பிரகாசம்)

அம்பாறை மாவட்டத்தில் வட்டமடு என்னும் இடத்திலுள்ள 4,000 ஏக்கர் காணியினால் ஒரு பெரிய சர்ச்சை ஏற்பட்டிருக்கின்றது. இந்தக்காணி 1974ஆம் ஆண்டில் அக்கரைப்பற்று, திருக்கோயில் பிரதேசத்திலுள்ள கால்நடை சொந்தக்காரர்களின் கால்நடைகள் மேய விடுவதற்காக வழங்கப்பட்டது என்று கால்நடைப் பண்ணைச் சங்கத்தின் தலைவர் தெரிவிக்கின்றார். இதே நேரத்தில் இந்தப்பிரதேசத்தில் காடுகளை அழித்து விவசாயம் செய்து வந்ததாகவும் இன்னும் ஒரு சாரார்கள் தெரிவிக்கின்றார்கள். இதேநேரத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நாலாயிரம் ஏக்கரில் இன்னும் காடாகவே அதிகமான ஏக்கர் நிலம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒருசாரார் தங்களுடைய நிலம் என்று நிலத்தைப் பயன்படுத்துவதற்குச் சென்றால் கால்நடைப் பண்ணையாளர்கள் அவர்களை விரட்டுகிறார்கள். இந்த நிலையில் விரட்டப்பட்டவர்கள் கடந்த 20.09.2004இல் அக்கரைப்பற்றில் பூரண ஹர்த்தால் நடத்தியதைத் தொடர்ந்து ஒரு சமரசம் ஏற்படுத்துவது தொடர்பாக அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பள்ளிவாசலில் நடத்திய சமரசக் கூட்டத்தினால் ஹர்த்தால் ஒரு தினத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது. இப்போது இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அக்கரைப்பற்றுப் பணிமனையில் நெற்செய்கைக்கான அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்களும், மேச்சல்தரை உரிமையாளர்களும், விடுதலைப்புலிகளின் தரப்பினரும், சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கள் கிழமை காலையில் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றார்கள்.

# கிரான் மகாவித்தியாலயத்தில் இன்று ஐம்பெரும் விழா

(கே.வாமதேவன்)

கல்குடாத் தொகுதியின் கிரான் மகாவித்தியாலயத்தில் இன்று (4ம்திகதி) காலை 9.00 மணியிலிருந்து 5 நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. வித்தியாலய அதிபர் வ.கந்தசாமியின் தலைமையில் இடம் பெறும் இவ்விழாவில் பின்வரும் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினர்களும், கௌரவ விருந்தினர்களும் கலந்து கொள்கின்றனர்.

முதலாவது புதியமாடிக் கட்டிடத்தை பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திறந்து வைக்கிறார். இதற்கு கௌரவ விருந்தினராக கிழக்கு மாகாண தேசிய இளைஞர் சேவைமன்றப் பணிப்பாளர் பொன்.செல்வநாயகம் கலந்து கொள்கிறார்.

இரண்டாவது புதிய கணனிக் கூடத்தை பாராளுமன்ற உறுப்பினர் த.கனகசபை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திறந்து வைக்கிறார். இதற்கு கௌரவ விருந்தினராக கல்குடா வலய கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஜெயினுதீன் கலந்து கொள்கிறார்.

மூன்றாவது வித்தியாலயத்தின் எழில் சஞ்சிகையைப் பாராளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெளியிட்டு வைக்கிறார். இதற்கு கௌரவ விருந்தினராக மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதி சி.பாக்கியராஜா கலந்து கொள்கிறார்.

நான்காவது வித்தியாலயத்தின் 2002ஆம் வருடத்திற்கான பரிசளிப்பு விழாவிற்கு பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கலந்து கொள்கிறார். இதற்கு கௌரவ விருந்தினராக கிரான் பிரதேச செயலாளர் வாசுகி அருள்ராஜ் கலந்து கொள்கிறார்.

இந்நிகழ்விற்கு வடக்கு-கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

கௌரவ விருந்தினராக கல்குடா பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.சேகுஅலியும், கணக்காளர் எம்.எல்.ஏ.முனாஸ் அவர்களும் கலந்து கொள்கிறார்கள்.

# பிரதேச ரீதியாக க.பொ.த.(சா.தர) மாணவர்களுக்கான கருத்தரங்கு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சம்மேளனத்தின் மூலம் ஒவ்வொரு பிரதேச ரீதியாகவும் க.பொ.த.(சா/த)பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவ மாணவியர்களுக்கான கருத்தரங்குகள் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக க.பொ.த.(ச/த) பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் நிறைவான பெறுபேறுகளைப் பெறத்தவறி தங்கள் ஆரம்பப்படிப்பினை தவறிவிட்டு மேற்படிப்புகளைத் தொடர முடியாமல் அல்லலுறுவதனை கருத்திற் கொண்டு சிறந்த ஆசான்கள் மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய சிறந்த மனோதிடத்தினையும் வழிவகைகளையும் கருத்தூட்டும் முகமாகவே இக்கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒழுங்கு செய்யத் தீர்மானித்துள்ள இக்கருத்தூட்டல் நிகழ்வில் அதிக விண்ணப்பங்கள் கிடைக்கும் பிரதேசங்களில் விஷேட கவனங்களும் செலுத்தவுள்ளதாகவும் மாவட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.k.தவராஜா அவர்களின் வழிகாட்டலுடன் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியர்கள் விபரங்களை பாடசாலை அதிபர்கள் மூலம் உறுதிப்படுத்தி பூ.பிரசாந்தன் தலைவர், மாவட்ட இளைஞர் சம்மேளனம், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிமனை அரசடி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு தபாலிலோ அல்லது அலுவலக நாட்களில் அலுவலகத்தில், அமைப்பாளர் திரு.யுவநாதனிடமோ,மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி. லலிதா கதிரமலையிடமோ, நேரிலே கையளிக்கும் படியும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# முஸ்லிம் மக்களை புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற சிறைக்குள் தள்ளியவர் ரணில்

*சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ்*

(மருதமுனை நிருபர்)

முஸ்லிம் மக்களுக்கு எந்தவித உத்தரவாதமும் தராமல் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற சிறைக்குள் முஸ்லிம் மக்களை தள்ளியவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தான் இவ்வாறு தெரிவித்தார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எச்.எம்.எம்.ஹரீஸ்

தேசிய முஸ்லிம் காங்கிரஸ் மருதமுனை மத்திய குழுவின் ஏற்பாட்டில் மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ஹரீஸ் இதனைத் தெரிவித்தார். மத்திய குழுவின் தலைவர் ஏ.ஆர்.ஏ.சத்தார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஹரீஸ் தொடர்ந்து உரையாற்றுகையில்:- வடகிழக்கிலே வாழுகின்ற தமிழ் மக்கள் எவ்வாறு அரசியல் உரிமைகளை பெறப்போராடுகின்றார்களோ அவ்வாறே முஸ்லிம் மக்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும். என்றே நாங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் வலியுறுத்துகின்றோம் என்றார்.

# அம்பாறை மாவட்டத்தில் கடும் மழை பெரும் போக விதைப்பு பாதிப்பு

**-விவசாயிகள் கவலை-**

(கணன்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழைகாரணமாக விவசாயிகளின் பெரும்போக விதைப்பு நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அம்பாறையில் நடந்த விவசாயிகளுக்கான ஆரம்பக் கூட்டத்தீர்மானத்தின் படி 10.10.2004 ந் திகதி விதைப்பு வேலைகள்ளை ஆரம்பித்து எதிர்வரும் 25.10.2004 ந் திகதியுடன் முடிக்க வேண்டுமென்ற தீர்மானத்தினை நிறைவேற்ற முடியாதுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் இம்மாதம் 30ம் திகதி வரையும் விதைப்பு வேலைகளை நீடிப்பதற்கான உத்தரவை வழங்குமாறு பிரதேச செயலாளர் ஊடாக விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இலவச ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

(பூ.பிரசாந்தன்)

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சம்மேளனத்தின் வேண்டுகோளில் மட்டக்களப்பு மாவட்ட ஆங்கிலப் பிராந்திய உதவி நிறுவனத்தினரால் இலவச ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் பல மேற்படிப்புக்களை பலர் மேற்கொண்டு வருகின்ற போது போதிய அளவு ஆங்கில அறிவு இன்மையினால் தொழில் பெறுவதில் பலத்த சிரமத்தினை எதிர்நோக்கி வருவதினைக் கருத்தில் கொண்டு மட்டக்களப்பில் ஆங்கில ஆசிரியர்களில் தேர்ச்சி பெற்றவர்களுள் ஒருவரான திரு.v.கமலதாஸ் மூலம் ஆரம்பிக்கப்படவுள்ள இவ்வகுப்புக்களில் முதற்கட்டமாக பயிற்சி ஆசிரியர்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சம்மேளன இளைஞர், யுவதிகளுக்குமாக நடத்தப்படவுள்ளதுடன் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 8.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை நடாத்தப்படவுள்ளது.




**மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் விவசாயத்தில் ஆர்வமுள்ளவரும், சமூக சேவையாளரும், தற்போதைய வவுணதீவு பாம்பர்சேனைக் கண்டத்து விவசாய அமைப்பு செயலாளரும், கமநலகேந்திர நிலையக் குழு உறுப்பினருமான செல்லத்துரை அழகரெத்தினம் அவர்களை சந்தித்த போது தற்போதைய பெரும்பாக நெற் செய்கை பற்றியும், இப்பகுதி விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் ஈழநாதம் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி வருமாறு:**



**கேள்வி:-** அண்மையில் திட்ட முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடைபெற்றது அது எப்பொழுது நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்ன?

**பதில்:-** 23.09.2004 வியாழக்கிழமை காலை 10.15 மணியளவில் உப தலைவர் க.வேலாயுதம் தலைமையில், ஆயித்தியமலை நீர்ப்பாசனத் திணைக்கள கூறுக் காரியாலயத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. மகிழவட்டவான்

**பதில்:-** தற்போது பெய்த கூடுதலான மழையானது இந்த நெற் செய்கைக்கு ஏற்புடையதாக இல்லை. காரணம் வயல்களில் நீர் தேங்கி நிற்பதால் ஒரு நாளைக்கு 5-6 ஏக்கரே உழவு வேலை செய்ய முடிகிறது. இதனால் உரிய காலத்தில் விதைப்பு வேலையை ஆரம்பிப்பது சற்று சிரமமே எனலாம்.

**கேள்வி:-** இந்த பெரும்பாக நெற்செய்கைக்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ள புதிய நெல்லினங்கள் எவை? இந்த புதிய நெல்லினத்தை செய்கை பண்ணுவதால் ஹெக்ரெயருக்கு எவ்வளவு வீதம் விளைச்சல் கிடைக்கும்?

**பதில்:-** அதாவது நெல்லினங்கள் 3. 31/2, 4 மாதத்துக்குரிய வையே பெரும்பாலும் விரும்பத்தக்கது புதிய நெல்லினங்களான

பிஜி (Bg) 300 ஹெக்ரெயருக்கு சராசரி விளைச்சல் 100-120 புசல்

பிஜி (Bg) 94-1 ஹெக்ரெயருக்கு சராசரி விளைச்சல் 150 புசல்

பிஜி (Bg) 352 ஹெக்ரெயருக்கு சராசரி விளைச்சல் 140 புசல்

இவை 3 மாதத்துக்குரிய நெல்லினம் இதில் இன்னும் பல இனங்கள் இருந்தாலும் எமது பகுதியை பொறுத்த வரையில் நான் சொன்னவையே கூடுதலாக விதைக்கிறார்கள். அடுத்து 31/2 மாதத்துக்குரிய நெல்லினங்களாவன.

டையில் பசளை வழங்கப்பட்டால் இதன் பாதிப்பு குறைவடையும், பசளை விலை அதிகரித்தால் நெல்லின் விலையும் அதிகரிக்குமாகவிருந்தால் பரவாயில்லை.

தற்போது டீசல் விலை அதிகரித்ததினால் விவசாயச் செய்கையில் 1000 ரூபாய் (ஒரு ஏக்கருக்கு) மேலதிக செலவு ஏற்படுகின்றது. அப்படி இருக்க பசளை வகைகளில் விலையும் அதிகரித்தால் எங்கள் நிலைதான் வேதனைக்குரியது.

**கேள்வி:-** பெரும்போக நெற்செய்கை பற்றி விவசாயப் போதனாசிரியர்கள் கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு நெற் செய்கை பற்றிய விளக்கம் கொடுக்கிறார்களா?

**பதில்:-** எமது பகுதியைப் பொறுத்தவரை இது மிகக் குறைவு என்றே கூற முடியும். இவர்கள் கருத்தரங்குகள் வைக்கிறார்கள் யாருக்கென்றால் விவசாயக் குழுவில் அங்கம் வகிப்பவர்களுக்கு மாத்திரமே இதில் போதனாசிரியர்களை மட்டும் குறை கூற முடியாது. விவசாயிகளும் கூடுதல் கவனமெடுப்பதில்லை. எனது அபிப்பிராயம் என்னவென்றால் இது பற்றிய விழிப்புணர்வை விவசாயிகள் மத்தியில் போதனாசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும். உதாரணத்திற்கு இரண்டு கிராம சேவகர் பிரிவை ஒன்றிணைத்து விவசாயிகளுக்கு கருத்தரங்கு

விலைப்படி நெல்லைக் கொள்வனவு செய்தால் இந்தப் பிரச்சினை ஏற்படாது அரசாங்கம் அறுவடை காலத்தில் நெல்லைக் கொள்வனவு செய்யுமாக இருந்தால் எப்படியும் முதலாளிமார் அரசாங்கம் தீர்மானித்த தொகையிலிருந்து கூடுதல் தொகையைக் கொடுத்தே நெல்லைக் கொள்வனவு செய்வார்கள். இதனால் விவசாயிகளுக்கும் நன்மை ஏற்படுவதுடன் அரசாங்கத்திற்கும், தனியாருக்கும் இடையில் சந்தைப்படுத்தலில் போட்டியும் ஏற்படும்

**கேள்வி:-** பெரும்போக நெற்செய்கைக்கு வங்கிக் கடன் பெறும் முறை பற்றி சற்று கூறுவீர்களா?

**பதில்:-** இந்தக் கடனைப் பெறுவதானால் விதைப்புக் காலத்துக்குள்ளே காப்புறுதி செய்ய வேண்டும். அதாவது விதைப்புக் காலம் முடிந்த பின் காப்புறுதி செய்தால் அதை வங்கி அனுமதிக்காது அத்துடன் விதைப்புக்காக சிபாரிசு செய்யப்பட்ட நெல்லினம் பற்றிக் கட்டாயம் கூற வேண்டும். இந்த நெல்லினத்தை விடுத்து வேறு நெல்லினம் விதைத்தாலும் கடன் கிடையாது

விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களம் ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் அடிப்படையில் 10 ஏக்கருக்கு உட்பட்டவர்களே ஓய்வூதியம் பெறலாம் இதற்கு வயதைப் பொறுத்தே பணம் கட்டவேண்டும். 60 வயதிலிருந்து விவசாய ஓய்வூதியத்தைப் பெறலாம். இதனால் விவசா

# ஏரிபொருள் விலை அதிகரிப்பு விவசாயச் செய்கையைப் பாதிக்கச் செய்யும்

கண்டத்தில் 2 ஆற்றுப்பிரிவு கால்வாய், அணைக்கட்டு கட்டல், ஒளிமடு, நெடியமடு பாதை திருத்தம் செய்யப்பட வேண்டும், கரடியனாறு கண்ட வாய்க்கால்கள் திருத்தப்பட வேண்டும். என கூடுதலாக வாய்க்கால்கள் திருத்த வேலை, விவசாயப் பாதை அமைத்தல், அணைக்கட்டு அமைத்தல், பாதைகள் திருத்தம் செய்யப்பட வேண்டும். வாய்க்கால்களில் தேங்கியிருக்கும் வண்டல் மண்ணை அகற்றுதல் என பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன் அவை திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று விவசாயப் பிரதிநிதிகளால் கேட்கப்பட்டது.

**கேள்வி:-** பெரும்போக நெற் செய்கைக்கான வேலைகள் எப்போது ஆரம்பமாகிறது என்று கூறமுடியுமா?

**பதில்:-** 28.09.2004ல் இருந்தே வேலைகள் ஆரம்பமாகிவிட்டது.

**கேள்வி:-** வேலைகள் ஆரம்பமாகி விட்டாலும் விதைப்பு எப்போது ஆரம்பமாகி எப்போது முடிவடைகின்றது?

**பதில்:-** விதைப்புக்கான ஆரம்பவேலைகளை விவசாயிகள் 15.10.2004 தொடங்கி 15.11.2004 சரியாக ஒரு மாத காலத்திற்குள்விதைப்பு வேலைகளை முடிப்பது சிறப்பாகும் என நினைக்கிறேன்.

ஏ.ரி (At)- 353 ஹெக்ரெருக்கு சராசரி விளைச்சல் 120 புசல்

எல்டி (Ld) 355 ஹெக்ரெயருக்கு சராசரி விளைச்சல் 100 புசல்

எல்டி (Ld) 356 ஹெக்ரெயருக்கு சராசரி விளைச்சல் 100 புசல்

4 மாதத்திற்குரியவை

பிஜி (Bg) 380 ஹெக்ரெயருக்கு சராசரி விளைச்சல் 150 புசல்

பிஜி (Bg) 403 ஹெக்ரெயருக்கு சராசரி விளைச்சல் 150 புசல்


எச் (H) 4 ஹெக்ரெயருக்கு சராசரி விளைச்சல் 80 புசல்.

இத்தகைய நெல்லினங்களை வயலில் செய்கை பண்ணும் போது சிறந்த கால நிலையும், உரிய நேரத்தில் பராமரிப்பும் செய்தால் நான் கூறிய விளைச்சலை ஓரளவு பெறலாம்.

**கேள்வி:-** வயல் வேலையில் ஈடுபடும் கூலித் தொழிலாளருக்கு ஒரு நாளைக்கு கூலித் தொகை எவ்வளவு?

**பதில்:-** எமது ஆரம்பக் கூட்டத்தில் 250 ரூபாய் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் 300 ரூபாய் கொடுக்க வேண்டும்.

**கேள்வி:-** ஒரு ஏக்கர் வயல் உழவுக்கு எவ்வளவு தொகை பணம் செலவாகும்.



**கேள்வி:-** பெரும்போக நெற் செய்கைக்கு முன்பே நெல் செய்கை பண்ணப்படும் காணியிலிருந்து கால்நடைகளை வெளியேற்ற வேண்டும் அல்லவா அது பற்றி கூட்டத்தில் தீர்மானிக்கப்படவில்லையா?

**பதில்:-** மாடுகளை வெளியேற்றுவது பற்றி தீர்மானிக்கப்பட்டது. அதாவது 01.10.2004 முன்பு குதம்பா, வெள்ளைக்கல், தளவாய்க்கு மாடுகளைக் கொண்டு செல்ல வேண்டும் எனக்கேட்கப்பட்டது.

**கேள்வி:-** தற்போது நிலவும் காலநிலை பெரும்போக நெற்செய்கைக்கு ஏற்ற கால நிலையா?

**பதில்:-** கூட்டத் தீர்மானப்படி 1800 ரூபாய் தொடக்கம் 2200 ரூபாய் வரை கொடுக்க வேண்டும். ஆனால் ஒரு ஏக்கருக்கு 4 உழவு செய்தால் தற்போது 2000 ரூபா வீதம் உழவு இயந்திரக் காரர்கள் எடுப்பார்கள் என நினைக்கிறேன். ஏனெனில் தற்போது டீசல் விலை அதிகரித்துள்ளது. இந்த டீசல் விலை இன்னும் அதிகரிக்கும் போல் தெரிகின்றது.

**கேள்வி:-** நெற் செய்கைக்குப் போடப்படும் பசளைகளில் விலை அதிகரிக்கப்படலாம் இதில் விவசாயிகள் பாதிக்கப்படுவார்களா?

**பதில்:-** கட்டாயம் விவசாயிகள் நேரடியாகப் பாதிக்கப்படுவார்கள் ஆனால் மானிய அடிப்ப

வைத்தால் நல்லது. அத்துடன் இவர்களுக்கு பசளைகளின் பாவனை முறை, ஏனைய விவசாய முறை பற்றி விளக்கம் கொடுக்க வேண்டும்.

**கேள்வி:-** அண்மையில் புது மண்டபத்தடியில் புதிதாக திறக்கப்பட்ட கமநல கேந்திர நிலையத்தின் செயற்பாடு எத்தகையது?

**பதில்:-** இது மழையை நம்பி நெற் செய்கை பண்ணப்படும் கண்டங்களில் ( காணிகள்) ஏற்படும் பிரச்சினைக்கு உரிய விதத்தில் தீர்வு காணும் நோக்கிலேயே இந்த நிலையம் அமைக்கப்பட்டது. அத்துடன் இவை சம்மந்தமாக வரையறுக்கப்பட்ட தீர்மானங்களை ஏற்படுத்தல். உதாரணத்திற்கு கள்ளச்சேனை, சாமந்தியாறு, நீர்பாய்ச்சல் சம்மந்தப்பட்ட பிரச்சி னையைக்கூறலாம்.

**கேள்வி:-** பெரும்பாக நெற் செய்கையை மேற்கொண்டு நெல்லை அறுவடை செய்து விற்பனை செய்தால் எமக்கு எதுவித இலாபமும் இல்லை என்று இப்பகுதி விவசாயிகள் கூறுகி ன்றார்களே அது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** விவசாயிகள் கூறுவது உண்மையே இவர்கள் இடைத்தரகர்களால் சுரண்டப்படுகின்றார்கள். அதாவது முதலாளிமார் ஒன்று சேர்ந்து தீர்மானம் எடுத்து அவர்கள் அனைவரும் ஒரு விலையை தீர்மானித்து விட்டு ஏழை விவசாயிகளை ஏமாற்றுகின்றனர். அத்துடன் நெல்லை கொள்வனவு செய்வதுடன் விவசாயிகளுக்குரிய பணத்தை உரிய காலத்தில் கொடுக்காது அவற்றை அவர்கள் மொத்தமாக பெற்று சேமிக்கிறார்கள். இதில் முதலாளிமாருக்கு வட்டி கிடைக்கிறது. இதன் பின்னரே விவசாயிகளுக்கு மொத்தப் பணத்தையும் கொடுக்காது கொஞ்சம் கொஞ்சமாகவே பணத்தை கொடுக்கிறார்கள். இதில் எப்படி விவசாயிகளுக்கு இலாபம் ஏற்படும்.

**நேர்காணல்:- கிரிஜா**

அடுத்து சில முதலாளிகள் ஏழை விவசாயிகளுக்கு கடனாக பசளை, மருந்து வகைகளை கொடுப்பதுடன் அவர்கள் இவற்றைக் கொள்வனவு செய்யும் விலையை விட கூடுதல் விலைக்கு கடனாக இவற்றை கொடுத்து விளைவின் பின்னர் பசளை விலையை விட குறைந்த விலைக்கே நெல்லை வாங்குகின்றார்கள். இதனால் எப்படி இலாபம் ஏற்படும் எனது கருத்து என்னவென்றால் விவசாயிகள் இடைத் தரகர்களால் சுரண்டப்படுவது குறைய வேண்டும். இதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதாகும்.

**கேள்வி:-** அரசாங்கம் நிர்ணயிக்கப்பட்ட விலைப்படி நெல்லை கொள்வளவு செய்தால் நீங்கள் கூறிய சுரண்டல் நடைபெறாது அல்லவா?

**பதில்:-** நிச்சயமாக, அரசாங்கம் நிர்ணயித்த

யிகள் நன்மையடைவார்கள்.

**கேள்வி:-** இப்பகுதி பெரும்போக விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாது?

**பதில்:-** முக்கிய பிரச்சினை தண்ணீர் பிரச்சினையாகும். அதாவது பாய்ச்சல் பூமிகளைத் தவிர ஏனைய (மழையை நம்பி) செய்கை பண்ணப்படும் பூமிகளுக்கு உரிய காலத்தில் மழை கிடைக்காமல் போகின்றமை இப் பகுதி வயல் நிலங்கள் பண்படுத்தப்படாமை இதனை பண்படுத்தினால் கூடுதல் விளைச்சல் பெறலாம் உதாரணத்திற்கு பண்படுத்தப்பட்ட நிலத்தில் 1 ஏக்கருக்கு 70 புசல் கிடைக்கும். விவசாயிகள் விவசாயத்தை முறைப்படி மேற்கொள்ளாமை கிருமிநாசினி கலப்படம் செய்யப்படுகின்றது. இதனால் விளைச்சல் குறைவு விவசாய அதிகாரிகள் உரிய காலத்தில் விவசாயிகளுக்கு விளக்கம் கொடுப்பது குறைவு, கிராமிய மட்டத்தில் விவசாயம் பற்றிய விளக்கம் கொடுக்க வேண்டும். தற்போது அண்ணளவாக 14,000 ஏக்கரே பெரும்போகத்தில் மழையை நம்பி செய்யப்படுகின்றது. மொத்தமாக வுள்ள 25.000 ஏக்கர் பூமி நீர்பாய்ச்சல் மூலம் செய்கை பண்ணக்கூடியது.

**கேள்வி:-** 23.09.2004 கூட்டத்தின் படி நீங்கள் முன்வைத்த கோரிக்கைகளை உரிய அதிகாரிகள் நிறைவேற்றுவார்களா?

**பதில்:-** கோரிக்கைகளை முன்வைப்பது எமது கடமை அதனை செயற்படத்த வேண்டியது அதிகாரிகள் தானே அவர்கள் எடுக்கின்ற முடிவின் படியே நடக் கும் நான் இதில் ஒன்றை கூற விரும்புகின் றேன். நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செயற்பாடுகள் குறைவு 25 வருடத்திற்கு முன்பு அமைக்கப்பட்ட வாய்க்கால்கள், அணைக் கட்டுக்கள், விவசாயப் பாதைககளே தற்போது இது வரைக்கும் இருக்கின்றது. இவை இது வரை திருத்தப் படவுமில்லை புதியவை அமைக்கப்படவுமில்லை. அதிகாரிகளிடம் இது விடயமாகக் கேட்டால் இதற்குரிய பணம் தங்களிடம் இல்லை எனக் கூறுகின்றனர். இன்னொரு விடயத்தையும் நான் கூற விரும்புகின்றேன். தற்போது 9000 ஏக்கர் பூமிக்கே நீர்ப்பாசனம் மூலம் நெற்செய்கை பண்ணப்படு கின்றது. ஆனால் 18000 ஏக்கர் பூமிக்கு நீர்ப்பாசனம் செய்யலாம். ஆனால் மழை காலத்தில் ஆறுகள், முறிவுகள் மூலம் நீர் வீணாக்கப்படுகின்றது. இதனைத் திசை திரும்புவதன் மூலமாக கூடுதல் வயல் நிலங் கள், கால் நடைகள், மக்கள் நீரினைப் பெற்று நன்மையடைவார்கள் உரிய நேரத்தில் உரிய காலத்தில் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் நன்மை கிடைக்கும் இவற்றிற்கு முக்கிய காரணம் அதிகாரிகளின் அசட்டையீனமே எனலாம். இதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.


# அதிபர் புஷ் – ஜோன் கெர்ரி நேரடித் தொலைக்காட்சி விவாதம்

(வொஷிங்டன்)

அமெரிக்க அதிபர் புஷ் குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஜோன் கெர்ரி ஆகியோருக்கிடையேயான முதலாவது நேரடித் தொலைக்காட்சி விவாதம் முடிவடைந்து விட்ட நிலையில் அமெரிக்க வாக்காளர்களின் குழப்பம் மேலும் அதிகரித்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

இந்த நேரடி விவாதத்தில் பயங்கரவாதம் அமெரிக்காவைப் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றது. அதற்கெதிராகப் போராட வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம். ஆனால் அதிபர் புஷ் அவர்கள் இதிலிருந்து நழுவிக் கொள்ளும் விதத்தில் புஷ் அவர்கள் அவசியமில்லாமல் ஈராக் மீது படையெடுத்துள்ளமை எந்தப் பயனையும் தராது என்பதை மேற்கோள் காட்டி மிகக் காரசாரமாக புஷ் அவர்களை விமர்சித்திருக்கிறார். ஆனால் அதிபர் புஷ் அவர்கள் நான் அமெரிக்காவை எப்படி வழிநடத்த வேண்டுமோ அவ்வாறே சரியாக வழிநடத்தியுள்ளேன். எனக்கு வெற்றி வாய்ப்பு மிக அதிகமாக வேயுள்ளது. என்னும் சாரப்பட விவாதிக்கிறார்.





அடுத்ததாக கெர்ரி அவர்கள் பயங்கரவாதிகள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களைக் கண்டுபிடித்துக் கொன்றொழிப்பேன் என்று பேசியுள்ளதோடு விவேகம் என்றால் திசைதிருப்புதல் என்று அர்த்தப்படாது. என்றும் சாட்டமாய்ப் பேசியுள்ளார். மேலும் சோவியத் ரஷ்யாவிலிருந்து அணுவாயுதங்களுக்கான மூலவளங்கள் தற்போது பயங்கரவாதிகளின் கைகளுக்கு மாறி விட்டது. இதுபெரும் ஆபத்தான தொன்று இதனொரு பகுதியாக வடகொரியா அணுவாயுதத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றது. இதைத் தடுக்க அதிபர் புஷ் அவர்கள் தவறி விட்டார். என்னும் தலைப்பில் இரண்டாவதாக வாதிட்டார். இதற்குப் பதிலளித்துப் பேசிய அதிபர் புஷ் அவர்கள், ஈராக் மீதான யுத்தம் தவறானதொன்றல்ல என்றும் ஒசாமா மற்றும் சதாம் ஆகிய இருவரும் எமது எதிரிகள் இவர்களை ஒழிக்க நான் நடவடிக்கை எடுத்தது நியாயமானதொன்றுதான் என்றும் சாரப்படப் பேசினார். இரண்டாவது நேரடி விவாதம் எதிர்வரும் 8ம் திகதி மிரிசோனாவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## நைஜிரியாவில் கோடரியால் தாக்கிய விமானப் பயணி பொலிசாரால் கைது

(ராய்ட்டர்)

நையீரியாவில் உள்நாட்டு விமானம் ஒன்றில் பயணி ஒருவர் இரண்டு விமானிகளையும், பயணி ஒருவரையும் கோடாலியால் தாக்கி காயப்படுத்தியிருக்கின்றார்.

காயமடைந்த இரு விமானிகள் மிகுந்த சிரமத்திற்குள் விமானத்தைத் தரையிறக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த விமானத்தில் 07 பயணிகள் பயணம் செய்திருக்கின்றனர்.

தாக்குதல் நடாத்தியவர் உடனடியாக விமான நிலையம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நையீரியா நாட்டைச் சேர்ந்தவர். என்றும் பொலிஸார் தெரிவித்திருக்கின்றார்.

# உலக செய்திகள்

## எந்த மொழிக்கும் நாங்கள் விரோதிகள் அல்ல;என்கிறார் கருணாநிதி

(சென்னை)



தி.மு.க எந்த மொழிக்கும் விரோதி அல்ல என கருணாநிதி கூறியுள்ளார். சென்னையில் ராஜஸ்தான் இளைஞர் சங்க பெருநகர உணவு வங்கியின் 11ம் ஆண்டு நிறைவு விழா மியூசிக் அகடமியில் நடைபெற்றது.

தி.மு.க தலைவர் கருணாநிதி விழாவுக்கு தலைமை தாங்கி முகப்போர் வசந்தம், கீழ்ப்பாக்கம் பாலவிகார் ஆகிய இடங்களில் உள்ள ஆதரவற்றோர் இல்லங்களுக்கு கருணாநிதி உணவுத் தானியங்களை வழங்கினார்.

தனிப்பட்ட முறையிலே எந்த மொழிக்கும் நாங்கள் விரோதியல்ல தனிப்பட்ட முறையிலே எந்த மொழிக்கும் திராவிட முன்னேற்றக்கழகம் அல்லதுஅதன் தலைவராகிய நான் அல்லது இந்தக் கழகத்திலே இருப்பவர்கள் விரோதிகள் அல்ல. ஆனால் எந்த மொழி ஆதிக்கம் செலுத்த வந்தாலும் அதற்கு நாங்கள் விரோதிகள். ஆதிக்கம் செலுத்துவதற்குத் தான் நாங்கள் விரோதிகளே தவிர, அவைகளை வரவேற்பதில் அந்த மொழியைப் பயிலுவதில், கற்பதில் கற்றவர்களை மதிப்பதில், அந்த மொழிக்கு உரிய மரியாதையைச் செலுத்துவதில் நாங்கள் யாருக்கும் பின்வாங்கியவர்கள் அல்ல என அவர் தெரிவித்தார்.இதையெல்லாம் சொன்னால் கூட இங்கேயுள்ள சில பத்திரிகையாளர்கள் இப்படி கருணாநிதி பேசியதற்கும், தயாநிதிமாறன் பேசியதற்கும் காரணம் அவர் தன்னுடைய பேரன் தயாநிதி மாறனையே இந்தி படிக்க வைத்திருக்கிறார். அதுதான் என்று வழக்கமாகச் செய்கின்ற பொய்ப்பிரசாரத்தை இன்னும் கொஞ்சம் வேகமாக முடுக்கிவிடக்கூடும்.

உள்ளபடியே தயாநிதி மாறனுக்கு கிந்தி தெரியாது. அவர் கிந்தி வகுப்பில் சேர்க்கப்பட்ட வருமல்ல கிந்தி படித்தவருமல்ல என்று கூறினார்.

## நாகலாந்து குண்டு வெடிப்பில் 36 பேர் பலி; 100 பேர் படுகாயம்



(கோகிமா)

நாகலாந்தில் இரு இடங்களில் குண்டு வெடித்ததில் 36 பேர் பலியானதுடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இந்தியாவில் வட கிழக்குப் பகுதியில் உள்ள நாகலாந்து மாநிலத்தில் தீவிரவாதிகள் அவ்வப்போது வன்முறை செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அங்குள்ள திமாபூர் நேற்று முன்தினம் இரு இடங்களில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்தன. திமாபூர் ரயில் நிலையத்தில் குண்டு வெடித்ததில் டிக்கட் கவுண்டர் முழுவதும் இடிந்து வீதியோரமும் சேதமடைந்தது. இங்கு குண்டு வெடித்த அதே நேரம் ஹொங்கொங் சந்தையிலும் குண்டு வெடித்தது.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களிலும் 36 பேர் உடல் சிதறி பலியானார்கள். ரயில் நிலையக் குண்டு வெடிப்பில் பாடசாலைக் குழந்தைகள் உட்பட 22 பேரும் சந்தைக் குண்டு வெடிப்பில் 14 பேரும் பலியானார்கள். மேலும் இந்த இரு சம்பவங்களிலும் நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். பொலிசாரும் மீட்புப் படையினரும் சம்பவ இடங்களுக்கு விரைந்து சென்று இடிபாடுகளை அகற்றி பிணங்களை மீட்டனர். காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்தச் சென்றனர்.

அண்டை மாநிலங்களில் செயல்படும் தீவிரவாத இயக்கங்கள் இந்தக் குண்டு வெடிப்புக்கு காரணமாக இருக்கலாம் என்று நாகலாந்து பொலிசார் கருதுகின்றனர்.

இந்தக் குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு மத்திய உட்துறை மந்திரி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். குண்டு வெடிப்பு சம்பவம் பற்றி நாகலாந்து முதல் மந்திரியிடம் தொலைபேசியில் கேட்டு அறிந்த அவர் பின்னர் அது குறித்து பிரதமர் மன்மோகன்சிங்கிடம் விளக்கிக் கூறினார்.

# அமெரிக்காவில் பாரிய எரிமலை அதிர்வு அபாயம்

(வொஷிங்டன்)

கடந்த சனிக்கிழமையன்று அரசாங்க விஞ்ஞானிகள் எரிமலைக் குழம்பு வெளியாகிக் கொண்டிருப்பதையிட்டு முன்னெச்சரிக்கை செய்துள்ளனர். தொடர்ந்து இரண்டு நாட்கள் எரிமலைக் குழம்பு கக்கிக் கொண்டிருப்பதனையடுத்து எரிமலை அதிர்வும் ஏற்பட்டிருக்கின்றது. இதன் அருகாமையில் உள்ள உயிரினங்களுக்கும் உடமைகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது. இந்த எரிமலையின் அருகேயுள்ள ஒரு கட்டடத்தில் நூற்றுக்குமதிகமான பார்வையாளர்கள் இருக்கின்றார்கள் இவர்களை 05 மைல்களுக்கு அப்பால் ஜோன்சன் றிட்ஸ் எனும் நகரும்படி அதிகாரி கேட்டிருப்பதற்கிணங்க மிக விரைவாக 05 மைல்களுக்கு அப்பாலுள்ள கூறில்வாட்டர்றிட்ஸ் என்னும் இடத்திற்குச் சென்று விட்டதாக தெரியவருகின்றது. தற்போது இவர் கள் பாதுகாப்பாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சென் கெலன்ஸ் என்றழைக்கப்படும் இந்த எரிமலை மூன்றாவது மட்டத்திற்கு வரும் போது நடுக்கம் ஏற்படலாம் என புவியியல் ஆராய்ச்சியாளர் றொம் பியர்சன் என்பவர் அவதானிப்பு நிலையத்திலிருந்து தெரிவித்திருக்கிறார்.



மேலும் இவர் தெரிவிக்கையில் தங்களது எதிர்பார்ப்பின் படி அடுத்த 24 மணித்தியாலத்திற்குள் மேற்படி எரிமலை பயங்கரமாக வெடித்துச் சிதறலாம் எனவும் இந்த எரிமலை செப்ரெம்பர் மாதம் 24ம் திகதி தனது அசைவுகளை ஆரம்பித்ததாகவும் 1980அண்டு மே மாதம் 18ம் திகதி திடீரென இந்த எரிமலை குழம்பு கக்கியதாகவும் 57 பேர் கொல்லப்பட்டதாகவும் தென் மேற்குப் பிராந்தியம் முழுவதும் புகை மண்டலமும், சாம்பலும் படிந்து காணப்பட்டதாகவும் தெரிவித்தார். ஆனால் 1980களில் ஏற்பட்ட அசைவை விட சிறியதாகவே இருக்கும் எனவும் புவியியல் ஆராய்ச்சியாளர்களால் எதிர்வு கூறப்பட்டிருக்கின்றது. 1980ல் ஏற்பட்ட மேற்படி சென் கெலன்ஸ் எரிமலை வெடிப்பு 1300 அடி உயரத்துக்கும் அதிகமான தூரம் சென்றது. இதனுடைய சாம்பல் 600 அடி ஆழத்திற்கு இருந்தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஈராக்கிய அமெரிக்க இராணுவம் நடத்திய தாக்குதலில் 100 தீவிரவாதிகள் பலி;

(ராய்ட்டர்)

ஈராக்கில் அமெரிக்க இராணுவம் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட தீவிரவாதிகள் எண்ணிக்கை 100 ஆக உயர்ந்துள்ளது.

ஈராக்கில் பக்தாத் நகரின் பகுதியில் 60 மைல் தூரத்தில் சமதா நகரம் இருக்கின்றது. அந்த நகரை தீவிரவாதிகள் பற்றி அதை தங்களது மறைவிடமாகப் பயன்படுத்தி வந்தனர். இது பற்றி கேள்வியுற்ற அமெரிக்க இராணுவம் 5 ஆயிரம் இராணுவ வீரர்களுடன் சமரா நகருக்குள் நுழைந்தது. போர் விமானங்கள் ராணுவ டாங்கிகள் சமரா நகரை முற்றுகையிட்டன.

வெள்ளிக்கிழமையன்று அமெரிக்க இராணுவம் நடத்திய தாக்குதல் தொடர்ந்து 12 மணி நேரம் நீடித்தது. தீவிரவாதிகளுக்கும், இராணுவத்துக்கும் இடைவிடாமல் துப்பாக்கிச் சண்டை நடந்தது. தீவிரவாதிகளின் பிடியில் இருந்த மசூதி மற்றும் முக்கியமான இடங்களை அமெரிக்க இராணுவம் மீட்டது. அங்கு இருந்த தீவிரவாதிகள் பல வீடுகளில் போய் பதுங்கிவிட்டார்கள்.

# நியூசிலாந்து வங்களாதேஸ் கிரிக்கெட் அணிகள் மூன்று நாள் பயிற்சிப் போட்டிக்கு தயாராகியுள்ளது

(நமது நிருபர்)

நியூசிலாந்து அணிக்கு வங்களாதேஸ் கிரிக்கெட் கட்டு



ப்பாட்டுச்சபை அணிக்கும் இடையிலான மூன்று நாள் பயிற்சிப் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

வங்களாதேஸ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அணிக்கு சகல துறை ஆட்டக்காரரான அலக் கபாலி தலைமை தாங்குகின்றார். வங்களாதேஸ் தேசிய அணியிலிருந்து நீக்கப்பட்டிருந்த கபாலிக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்கும் நோக்கிலேயே இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

நியூசிலாந்து அணி எதிர்வரும் 08 ஆம் திகதி வங்களாதேஸ் செல்கின்றார். இரு அணிகளுக்கும் இடையிலான 01வது போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகும்.




# குருநாகலை கிரிக்கெட் விளையாட்டுக் கழகம் முதலிடம்

(நமது நிருபர்)

குருநாகலை கனிஸ்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகத்தினர் ஆச்சரியப் படத்தக்க விதத்தில் தோழமை ரீதியில் நடந்த கிரிக்கெட் ஆட்டத்தில் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

வெலகெதர அரங்கில் நடைபெற்ற இந்த விளையாட்டில் 14 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் எம்.நிரோசன் 74 கூட்டத்திற்கு ஒத்துழைத்தார். இவருக்கு ஏ.ரஞ்சன் ஒத்தாசை புரிந்தார். கு.இ.கி.க.சார்பாக ஏ.பிரசாந் 03 க்காக 58ஐ எடுத்தார். தற்போது கு.கி.கழகம் மிக உறுதியான ஒன்றாக விளங்குகின்றது.

# ஆஸிக்கு எதிரான தொடரில் ஆடுவாரா சச்சின் கங்குலி சதியால் ரசிகர்கள் அதிருப்தி

(நமது நிருபர்)

ஆஸிக்கு எதிராக பெங்களூரில் நடக்கும் டெஸ்டில் டெண்டுல்கர் விளையாடுவரார் என மீண்டும் சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தியா- அவுஸ்ரேலியா கிரிக்கெட் அணிகள் இடையே முதலாவது டெஸ்ட் போட்டி பெங்களூரில் நடக்க உள்ளது. இப்போட்டி. 6-ம் திகதி தொடங்குகின்றது.

இந்தப் போட்டிக்காக 15 இந்திய வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் டெண்டுல்கர் பெயரும் இடம் பெற்றிருந்தது. இடது முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக மினி உலக கோப்பை போட்டியில் பங்கேற்க முடியாமல் போன டெண்டுல்கர் இப்போது குணம் அடைந்து விட்டதாக சொல்லப்பட்டது.

டெண்டுல்கரும் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்டுகளில் விளையாட முடியும் என நம்பிக்கையோடு இருப்பதாக தெரிவித்தார். 3-ம் திகதி பெங்களூருக்கு டெண்டுல்கர் வருவார். பயிற்



சியில் ஈடுபடுவார் என்றும் சொல்லப்பட்டது.

டெண்டுல்கருக்கு எப்போதுமே தொடக்க பேட்ஸ்மேன் ஆக களம் இறங்க வேண்டும் என்பதில்தான் மிகுந்த விருப்பம் உண்டு. ஆனால் அணித் தலைவர் கங்குலி இதை விரும்புவதில்லை. முதல் ஆளாக டெண்டுல்கர் ஆட இறங்குவதால் அவருக்கு நிறைய நேரம் கிடைக்கிறது. அதனால் நிறைய செங்சுரி அடிக்கின்றார், ஓட்டங்களை குவிக்கின்றார், உலக சாதனை படைக்கிறார், இது கூடாது. அவரது வேகத்துக்கு கால்கட்டு போட வேண்டும் என்பதே கங்குலியின் எண்ணம்.

இதற்காக அவர் பல முறை காய்நகர்த்தி இருக்கிறார். சில போட்டிகளில் டெண்டுல்கரை மிடில் ஆர்டரிலும் களம் இறக்கி உள்ளார். இப்போது ஆஸிக்கு எதிராக முதலாவது பேட்ஸ்மேன் ஆக களம் இறங்க ஆசையோடு இருந்த டெண்டுல்கரின் எண்ணத்தில் நேற்று முன்தினம் மண்ணை அள்ளிப் போட்டது இந்திய கிரிக்கெட் சபை.

# ஆஸி வீரர் லாங்கர் அபார சதம்

(நமது நிருபர்)

மும்பை கிரிக்கெட் போட்டியில் அவுஸ்ரேலிய வீரர் லாங்கர் அபார சதம் அடித்தார்.

ராங்சி கோப்பை சம்பியன் ஆன மும்பை அணிக்கும், அவுஸ்ரேலியா அணிக்கும் இடையே 3 நாள் கிரிக்கெட் போட்டி மும்பை பிரபோர்ன் ஸ்டேடியத்தில் நடைபெற்றது.

அவுஸ்ரேலியா தனது முதல் இன்னிங்சை 7 விக்கெட்



இழப்புக்கு 302 ஓட்டம் எடுத்து டிக்ளேர் செய்தது. அடுத்து மும்பை அணி பந்தடித்தது. 255 ஓட்டத்திற்கு ஆட்டமிழந்து முதல் இன்னிங்சை மும்பை அணி இழந்தது.

நேற்று முன்தினம் 3-வது நாள் அதாவது கடைசிநாள் ஆட்டம் நடந்தது. அவுஸ்ரேலியா அணி 2-வது இன்னிங்சை விளையாடியது. லாங்கர் அபாரமாக ஆடி சதம் அடித்தார். அவர் 108 ஓட்டம் எடுத்திருந்த போது காயமடைந்து வெளியேறினார். கிளார்க் 52 ஓட்டம் எடுத்தார். ஷோட்கே-29, காட்டடிச்-7 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காமல் இருந்தனர். மொத்தம் 1 விக்கெட் இழப்புக்கு 207 ஓட்டம் எடுத்திருந்தபோது ஆட்டம் முடித்து கொள்ளப்பட்டது. இந்த போட்டி சமனில் முடிந்தது.

# வாழைக்காலை பாடசாலையின் குறைகள் எப்போது தீரும்?

தாந்தாமலைக்குச் செல்லும் பிரதான பாதையில் இருக்கும் வாழைக்காலை, பனையடிப் பாடசாலை என்று அழைக்கப்படும் பாடசாலையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றது.

இப்பாடசாலையிற்கு மாவடிமுன்மாரி, கச்சிக்கொடிச்சேனை, வாழைக்காலை, நாற்பது வட்டை பனிச்சையடிமுன்மாரி, போன்ற சிறிய கிராமங்களிலிருந்து பல சிரமத்தின் மத்தியில் பாடசாலைக்கு மாணவர்கள் செல்கின்றனர். ஆனால் இப்பாடசாலையானது வாழைக்காலை அரசி னர் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரோடு மட்டுந்தான் இரு க்கின்றது. வேறு எந்த வசதிகளும் காணப்படுவதாகத் தெரியவில்லை என்றுதான் கூற முடியும்.

பாடசாலையிலே முக்கிய பிரச்சினை சுற்று வேலியின்மை, ஆசிரியர்கள் பற்றாக்குறை, தளபாடங்கள் குறைவு, மலசல கூடம் மற்றும் குடிநீர் வசதியின்மை போன்ற பல குறைபாடுகள் காணப்படுவதனால் மாணவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். பாடசாலை வளாகத்திற்குள் மாடுகள், ஆடுகள் போன்ற கால்நடைகள் தொடர்ந்து தொந்தரவை கொடுப்பதனால் மாணவர்கள் பாடசாலைத் தோட்டங்கள், மரக்கன்றுகள் போன்றவற்றை செய்ய முடியாமலுள்ளதுடன் பாடசாலைச் சுற்றுச் சுழலும் மாசடைகின்றது. மற்றும ஆசிரியர்கள் பற்றாக்குறைவு காரணத்தால் மாணவர்கள் பூரணமாகக் கல்வி பெறமுடியாத நிலை ஏற்படுகின்றது.

இப்படியாகப் படுவான்கரைப் பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களும் அவர்களின் பிள்ளைகளும் கல்வி வசதியின்றி பூரணமாகக் கல்வியை பெற்றுக் கொள்வதற்கு ஆசிரியர்கள் இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டாலும் தூரம், போக்கு வரத்து வசதி இன்மை என்ற காரணத்தைக் காட்டிக் கொண்டு இடமாற்றத்தினை செய்து கொள்கின்றன.

இதனால் எமது மாணவர்களின் கல்வி பின் தள்ளப்பட்ட நிலையில் அவர்களுடைய எதிர்காலம் பாழாக்கப்படுகின்றது. மற்றும் ஒழுங்கான முறையில் குடிநீர், மல சலகூடம் இன்மை மழை காலத் தில் மட்டும்தான் குடிநீர் தட்டுப்பாடு இல்லை. கோடை காலங்களில் இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருக்கின்றது.

மாணவர்கள் இருந்து கற்றுக் கொள்வதற்கு கட்டிட வசதியில்லாமையால் புதிதாக வகுப்புக்களை தொடங்க முடியாத நிலையி னாலும் மாணவர்கள் மேலதிக கல்வி வசதியின்றி அவதியுறுகின்ற னர்.

எனவே சம்பந்த ப்பட்டவர்களான கல்வி அமைச்சின செயலாளர் அவர்களே, நிருவாகப் பணியில் ஈடுபட்டுவரும் அதிகாரிகளே தயவு செய்து இந்தப் பாடசாலையில் நிலவுகின்ற குறைகளை அவ தானித்து நிவர்த்தி செய்வது உங்களின் கடமையல்லவா எனவே மாணவர்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

**எஸ்.கமலன்**
**தாந்தாமலை.**



*அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் ஒரு முக்கிய கேந்திரமாக இருந்த போதிலும் ஒரு பஸ் நிலையம் இன்றுவரை இல்லாததினால் பஸ்கள் வீதிக் கரையோர ங்களில்தான் நிற்க வேண்டி இருப்பதுடன் பொத்துவில் பகுதியிலுள்ள ஆடுவளர்ப்பவர்கள் பஸ்கள் நிறுத்தும் பகுதியில்தான் ஆடுகளையும் விட்டு இருப்பதையும் படத்தில் காண்க.*

*(படப்பிடிப்பு:-வி. பி. சிவப்பிரகாசம், அக்கரைப்பற்று)*

# எங்கள் குரல்

## பாவற்கொடிச்சேனைக் கிராமத்திற்கு பஸ்சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வவுணதீவிலிருந்து பாவற்கொடிச்சேனைக் கிராமம் நோக்கி ஒரு பஸ் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

வவுணதீவிலிருந்து சுமார் 15 கிலோ மீற்றர் வரையான பாதையில் அதாவது பாவற்கொடிச்சேனை, ஊற்றுமடு, இருட்டுச்சோலைமடு, காயான்மடு, பருத்திச்சேனை, களிமடு, போன்ற இடங்களில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் மட்டக்களப்பு வைத்திய சாலைக்கு ஏனைய தேவைகளுக்குமாக தினசரி கால் நடையாகவே பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றன. இதனால் வைத்திய சாலைக்கு உரிய நேரத்திற்குப் போய் சிகிச்சை பெற முடியாது மக்கள் வீடு திரும்ப முடியாத மக்கள் கவலையடைகின்றனர்.

இது மட்டுமல்ல இந்தக் கிராமங்களிடையே இருக்கின்ற பாடசாலைகளுக்கு வருகின்ற ஆசிரியர்களும் நகர்புறங்களிலிருந்து வருவதனால் அவர்களும் மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகளில் வருகின்றனர். இதனால் அவர்கள் நேரத்திற்கு வந்து மாணவர்களுக்கு கல்வியைப் புகட்டுவதற்கு முடியாது போகின்றது. அத்தோடு இக்கிராமங்களிடையே வாழ்கின்ற மக்கள் போக்குவரத்திற்காக பெரும் அவதியுறுகின்றனர்.

அதாவது அவசர தேவைக ளுக்கு செல்ல முடியாத நிலை, நோயாளர்களை திடீரென விபத்து க்குள்ளாக்கிய ஒருவரை வைத்தி யசாலைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலைமை, மழை காலங்க ளிலும் வெயில் காலங்களிலும் போக்குவரத்தில் மக்கள் சிரமப்ப ட்டுக் கொண்டு தங்கள் தேவை களை நிறைவேற்றி வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், மட்டக்களப்பு நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனியினரும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ளும் இவ்விடயத்தில் சற்று கவன மெடுத்து படுவான்கரை மக்களது போக்குவரத்தில் இடையூறு ஏற்படா வண்ணம் பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என இக்கிராமத்திலுள்ள மக்களின் எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றன.

**எஸ்.சாந்தன்**
**பாவற்கொடிச்சேனை**



**சிந்தனைக்கு**

நாம் ஒருவரையும் ஏமாற்றவுமில்லை, துரோகம் இழைக்கவுமில்லை, ஆனால் எம்மை யாரும் ஏமாற்றினால் அல்லது எமக்குத் துரோகமிழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்.

*மேதகு. வே.பிரபாகரன்.*
*தமிழீழத் தேசியத் தலைவர்*


# ஈழநாதம்

கிழக்குப்பதிப்பு EEZHANATHAM

**பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.**
**தொலைபேசி :- 065-2226110,**
**065-2226303,**
batti@eezhanatham.com

**04-10-2004**


## சமாதானத்தை பின் நகர்த்தும் சதி முயற்சி

ஜனாதிபதி இன்று கூட்டவுள்ள தேசிய நல்லிணக்க பேரவை என்பது சமாதான முயற்சிகளை பின் நகர்த்தும் ஒரு சதி முயற்சியாகும். விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்காது இழுத்தடித்துக் கொண்டு காலம் கடத்தும் ஜனாதிபதி சமாதானத்திற்கு எதிரான சக்திகளை ஒன்று திரட்டி தனக்குப் பக்கபலமாக்கும் ஒரு ராஜதந்திர முயற்சிதான் இந்த ஆலோசனைப் பேரவை.

''ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது'' என்பது போல சந்திரிகாவின் ஆலோசனையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்பவோ நிராகரித்து விட்டது. மறுபுறம் தென்னிலங்கை அரசியல் கட்சிகளில் ஒருசாரார் இந்த சமாதான ஆலோசனை சபையினை தமிழினத்திற்கு ·வடக்குக் கிழக்கை தாரை வார்க்கும் முயற்சியாக தப்பான முறையில் நோக்கி நிராகரிக்கச் செய்கின்றதையும் நாம் அவதானிக்க கூடியதாகவிருக்கின்றது.

இதிலிருந்து ஏதோ ஒருவகையில் சிங்கள இனவாத சக்திகள்தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கும் விடயத்தில் எட்டவே நிற்கின்றன. புரிந்துணர்வோடு இப்பிரச்சினையை அனுகி இதற்கு அரசியல் ரீதியான தீர்வினைக் காண்பதற்கு உறுதுணை புரியும் நோக்குடைய சிங்களக் கட்சிகள் தெனனிலங்கையில் இல்லை.

இனவாதம் தோய்ந்த கொள்கைகளால் போர்த்தியிருக்கும் சிங்களக் கட்சிகள் கூடுவதால் தமிழ் இனத்தின் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இழுத்தடிப்புச் செய்வதுடன் இடியப்பச் சிக்கலாக்கும் நடவடிக்கைகளையே மேற்கொள்வர்.

இப்போது அனைத்துக் கட்சிகளுடனும் பேசி ஆராய்ந்துதான் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கு ஆலோசனை பெறவேண்டும் என ஜனாதிபதி நினைப்பது தவறானது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தலில் குதித்த போது அனைத்துக் கட்சிகளின் ஆலோசனையைப் பெற்றுத்தான் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப் போவதாக தெரிவிக்கவில்லை.

வேறுவேறு விடயங்களுக்கு தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கும் ஜனாதிபதி பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கும் விடயத்தில் மட்டும் சர்வ கட்சிகளின் அபிப்பிராயத்தை திரட்ட நினைப்பதன் உண்மை நிலையை நன்கு உற்று நோக்கினால் புரிந்து கொள்ள முடியும். ஐக்கிய தேசிய முன்னணி அரசும் விடுதலைப் புலிகளும் போர் நிறுத்த உடன்படிக்கை செய்வதற்கு முன்னதாக சர்வ கட்சிகளின் ஆலோசனை பெற்றுத்தான் உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவேன் எனக் கூறி சர்வ கட்சிகளின் ஆலோசனையைக் கேட்டிருந்தால் போர் நிறுத்த உடன்படிக்கை என்பது அன்று கைச்சாத்திடப்பட்டிருக்க முடியாது.

எனவே நல்லிணக்க ஆலோசனை சபை எனக் கூறி காலத்தை நகர்த்தி பேச்சுக்களை ஆரம்பிக்காது தமிழ்தரப்பை ஏமாற்றும் நடவடிக்கையை மேற்கொள்ளாது இலங்கைத்தீவின் இன்றைய யதார்த்தத்தை தெளிவாகப் புரிந்து நீதியான தீர்வு காண முன் வர வேண்டும்.

# புலிகளின் ஜெனிவா மாநாடு நல்லதொரு சூழலை உருவாக்கும்.

## -சுவிஸ் வெளிவிவகார அமைச்சர்-

(நமது நிருபர்)

**இலங்கையில் போர்நிறுத்தமும் அமைதி முயற்சிகளும் பெரும் ஆபத்துக்குள் சிக்கியுள்ளன. இந் நிலையில் ஜெனீவாவில் விடுதலைப் புலிகள் நடத்தும் மாநாடு மூலம் எடுக்கப்படும் தீர்மானம் நல்லதொரு செய்தியைத் தரும் என நம்புகிறோம். சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் முதன்மை அதிகாரி ஏ.எம்.பி.இம்கோவ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

சுவிற்ஸர்லாந்துக்குச் சென்றுள்ள விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினர், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சுவிஸ் அரசு வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு உதவி வழங்கி வருவதற்கும் உயர் மட்ட மாநாடு ஒன்றை அங்கு நடத்த உதவிய தற்காகவும் அன்ரன் பாலசிங்கம் தமது இயக் கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்தார். பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக தமது அமைப்பின் நிலைப்பாட்டை அவர் விளக்கிக் கூறினார்.அதன் பின் அங்கு உரையாற்றிய சுவிஸ் முதன்மை அதிகாரி இம்தோவ் மேலும் தெரிவித்ததாவது:- சர்வதேச அமைதிக்கான நகரமாக விளங்கும் இந்த நகரத்தில் கூடியிருக்கின்றீர்கள். தடைப்பட்டுப்போயுள்ள பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முடிவுகள் எடுக்கப்படும் என நம்புகிறோம். இந்த மாநாடு சமாதான முயற்சிகளின் நல்லதொரு சமிக்ஞையாக அமையும் எனக் கருதுகிறோம். இந்த முடிவுகள் நோர்வே மற்றும் ஸ்ரீலங்கா அரசுகளுக்கு நல்ல செய்தியாக அமையும். இலங்கையில் நாளாந்தம் மோசமடையும் நிலைமையையிட்டு சுவிஸ் அரசு கவலை யடைகின்றது. போர்நிறுத்தமும் பேச்சுக்களும் பெரும் ஆபத்தில் சிக்கியுள்ளன. இதிலிருந்து விடுபடவேண்டும். சுவிஸ் அரசு சமாதான முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவை வழங்கும் - என்று தெரிவித்தார்.




காத்தான்குடி மீரா பாலிகா மகா வித்தியாலய மாணவிகளுக்கு சென் ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் முதலுதவி அமைப்பினால் முதலுதவி பயிற்சி நெறி அண்மையில் நடாத்தப்பட்டது மாவட்ட ஆணையாளர் ஐ.எல்.ஜலீல் விரிவுரை நிகழ்த்துவதையும், வித்தியாலய அதிபர் எ.எச்.எம்.மீராசாஹிபு மாணவி எம்.ஏ.பாத்திமாவுக்கு சிறப்புப் பரிசு வழங்குவதையும் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவிகளின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். படம்:- செ.ஸ்ரீகோவிந்தசாமி.

# அகில இலங்கை தமிழ்த்தின போட்டி கொழும்பில் சனியன்று ஆரம்பம்

(ஸ்ரீகோவிந்தசாமி)

அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டிகள் எதிர் வரும் 9ம், 10ம், 11ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவுக் கல்விப் பணிப்பாளர் ந. நடராஜா தெரிவித்துள்ளார்.

மேற்படி திகதிகளில் நடைபெறவுள்ள தமிழ் மொழித் திறன் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் பம்பலப்பிட்டி இந்தக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் மொழித் தின ஏற்பாட்டுப் பணிமனையில் 8ம் திகதி பிற்பகல் 2.00 மணி தொடக்கம் தமது மேற்படி பதிவுகளை மேற்கொள்ள முடியும். மேற்படி பதிவுகளை மேற்கொள்ள வரும் போது தமது ஆள் அடையாள அட்டை, அல்லது அதிபரால் உறுதிப் படுத்தப்பட்ட புகைப்படம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அதே வேளை இவ்வருடம் அனைத்திலங்கைத் தமிழ் மொழித் திறன் போட்டிகளில் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும், சான்றிதழ்களும், நினைவுப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சகபாடி இறந்ததால் தடி முறித்து வீதியால் சென்றோரை அடித்த குரங்கு

(நமது நிருபர்)

தனது சகபாடியின் இறப்பினால் ஆவேசம் கொண்ட குரங்கு ஒன்று வீதியால் போவோர் வருவோரைத் தடியினால் துரத்தித் துரத்தி அடித்த சம்பவம் சாவகச்சேரி கல்லடிமூட்டுச் சந்திப்பகுதியில் இடம்பெற்றது.இரவுவேளை இடிமின்னல் தாக்கியதில் அப்பகுதியில் குரங்கு ஒன்று இறந்து விட்டது. மறு நாள் காலை அக்குரங்கு இறந்து விட்டதைக் கண்ட மற்றொரு குரங்கு தடி ஒன்றை முறித்து அவ்வீதியால் போவோர் வருவோரைத் துரத்தித் துரத்தித் தாக்கியது.

குரங்கின் ஆவேசத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மக்கள் தலை தெறிக்க ஓடினர் என்றும் கூறப்பட்டது.இரு மாதங்களுக்கு முன்னர் இதே இடத்தில் மின்சாரம் தாக்கி குரங்கு இறந்த போது கோபம் கொண்ட மற்றொரு குரங்கு மோட்டார் சைக்கிளில் வந்தசிலர் மீது பாய்ந்து தாக்கிக் காயப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

## இடைத்தரகர் இன்றி நெல்லை வாங்க மூன்று மாவட்டங்களுக்கு 15 கோடி ஒதுக்கீடு

(வி.ரி. சகாதேவராசா)

அம்பாறை, பொலனறுவை, அனுராதபுரம் ஆகிய மூன்று மாவட்ட விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல்லைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் 15 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இடைத்தரகர்கள் இன்றி விவசாய அமைச்சு நேரடியாக விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்காக விவசாய அமைச்சு மாவட்டம் தோறும் மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விவசாய அமைச்சு கொள்வனவு செய்யும் நெல்லை விவசாயத் திணைக்களத்திலும், கமநல சேவை திணைக்களத்திலும் களஞ்சியப்படுத்தப்பட ஏற்பாடு செய்யபட்பட்டுள்ளன.

விவசாய அமைச்சர் அனுரகுமாரதிசாநாயக திறைசேரி உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியதன் பலனாக 15 கோடி ரூபாவை அந்தந்த மாவட்ட அரச அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## ஈழநாத செய்தியாளரால் மணிபர்ஸ் ஒப்படைப்பு

(நமது நிருபர்)

களுவாஞ்சிகுடி பொதுச் சந்தைக்கு நேற்று முன்தினம் செய்தி சேகரிப்புக்காகச் சென்றிருந்த எமது ஈழநாதம் செய்தியாளர் அங்கு கண்டெடுத்த மணிபர்ஸ் ஒன்றை உரியவரிடம் கையளித்துள்ளார்.

களுமுந்தன்வெளிக் கொலனியைச் சேர்ந்த வளர்மதி வயது 23 என்பவரது மணிபர்ஸ்சையே எமது செய்தியாளர் கண்டெடுத்து ஒப்படைத்துள்ளார். அவ் மணிபர்ஸ்சினுள் 750 ரூபாப் பணம், அவரது தேசிய அடையாள அட்டை மற்றும் பல பற்றுச் சீட்டுத் துண்டுகள் காணப்பட்டிருந்தன. இதனையிட்டு எமது செய்தியாளரை அப் பெண் மற்றும் பொது மக்களும் பாராட்டினர்.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# டென்மார்க் அரசு தமிழர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகிறது

(நமது நிருபர்)

சமாதான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு சிறிலங்கா அரசாங்கத்துக்கு அழுத்தத்தை கொடுக்கத் தவறிய டென்மார்க் அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய நாடுகள் தடை செய்ய வேண்டுமென கேட்டிருப்பது தமிழர் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் செயலாகும்.

இவ்வாறு, திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை அறிக்கை வெளியிட்டுள்ளது. திணிக்கப்பட்ட யுத்தம் ஒன்றையே தமிழர்கள் எதிர்கொண்டனர். அதனை விடுத்து, டென்மார்க் அரசாங்கம் நினைப்பதைப் போன்று தமிழர்கள் யுத்தத்தை தாமே வலிந்து மேற்கொள்ளவில்லை. யுத்தத்தை திணித்தது பயங்கரவாதமா? அல்லது திணிக்கப்பட்ட யுத்தத்தை வெற்றிகரமாக முறியடிப்பது பயங்கரவாதமா? என்பதை டென்மாக் அரசாங்கம் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

இதன் பின்னரே, அதன் வெளிப்பாட்டை தெரியப்படுத்த வேண்டும் எனவும் திருகோணமலை வாழ் தமிழ் மக்கள் பேரவை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# தேசியத் தலைவரின் வழி நடத்தலின் கீழ் தாயகத்தை அபிவிருத்தி செய்வது எமது கடமையாகும்

## பட்டிருப்புக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் செல்வா



(எஸ்.ரவீந்திரன்)

**''தமிழீழத் தேசியத் தலைவர் அதி மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் தலைமைத் துவத்தின் கீழ் நெறிப்படுத்தலின் கீழ் வடக்குக் கிழக்கு அபிவிருத்தி செய்ய வேண்டியது எமது தலையாய கடமையாகும். நாம் இன்று ஆரம்பிக்கும் தேசிய எழுச்சி பேரவையானது வடக்குக் கிழக்கில் அமைக்கப்படுவதினூடாக கிராமத்தில் உள்ள பிரச்சினைகளை இனம் காண்வது மட்டுமன்றி கிராமத்தில் செய்ய வேண்டிய அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பெரிதும் உறுதுணையாக அமையும்.**

இவ்வாறு பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வா நேற்று களுவாஞ்சிகுடி சரஸ்வதி வித்தியாலயத்தில் வர்த்தக சங்க தலைவர் எஸ். பரமானந்தராஜா தலைமையில் நடைபெற்ற தேசிய எழுச்சி பேரவை அமைப்பின் அங்குரார்ப்பண கூட்டத்தில் கலந்து கொண்ட பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எதிர் காலத்தில் கிராம மக்கள் அனைவரின் ஒத்துழைப்பின் மூலம் கிராம, கோட்ட, மாவட்ட , மாகாண மட்டங்களில் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் பிரச்சினையினை நாம் இனம் காண்பதன் மூலம் தமிழ் மக்களின் விடிவுக்காகப் பாடுபடுவோம் என்றார்.

தொடர்ந்து தேசிய எழுச்சி பேரவையின் களுவாஞ்சிகுடி செயலாளராக பு.நாகேந்திரன் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

அத்தோடு இக் கூட்டத்தில் எதிர்வரும் 5ம் திகதி கேணல் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் ஞாபகார்த்தமாக களுவாஞ்சிகுடியில் மாபெரும் சிரமதானம் செய்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் சமுர்த்தி அலுவலர், கிராம சேவை அதிகாரிகள், புத்தி ஜீவிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

**வாகரைப் பிரதேசத்தில்....**

யிருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

நால்வர் பலியாகியிருக்கலாம் என அப்பகுதி மக்களும் தகவல் தெரிவிக்கின்றனர்.

**தமிழர்...**

புலிகளின் பிரதிநிதிகளும், தமிழர் தாயக மனித உரிமைகள் அமைப்பினரும், அரசியல் விவகாரக்குழுவினரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளையும், சுவிஸ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் இன்று சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

# மட். மாவட்டத்தில் கண்ணி அகற்றும் பணிக்கான நிதி உதவியில் முடக்கம்

(நமது நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள மிதி வெடிகளை அகற்றுவதற்காக உதவி வழங்க முன்வந்துள்ள நாடுகளின் நிதி உதவி தொடர்ந்து பெறுவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவிக்கின்றது.

நேற்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் இந்த தகவலை மாவட்ட பணிப்பாளர் கு.தேவராஜா வெளியிட்டுள்ளார். ''மக்'' நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் தற்போது மிதி வெடி அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக கூறிய அவர், 63 உள்ளூர் பணியாளர்கள் இந்த பணியில் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இம் மாவட்டத்தில் 57 இடங்களில் மிதி வெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது. இருந்த போதிலும் 38 இடங்கள் இது வரை அடையாளம் காணப்பட்டுள்ளது. பாலையடிவட்டை, வெல்லாவெளி மற்றும் புல்லுமலை ஆகிய இடங்களில் இந்த பணி பூர்த்தியடையும் தறுவாயை அடைந்துள்ளது.

அடுத்த கட்டமாக ஆயித்தியமலை மற்றும் ஓமடியாமடு ஆகிய இடங்களில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகள் இந்த பணிக்கு உதவி வருகின்ற போதிலும், அதன் நிதி உதவிகளைப் பெறுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த செய்தியாளர் மகாநாட்டில் கலந்து கொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடுவர் பணியக திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, எதிர்வரும் புதன்கிழமை ஒக்டோபர் 6ஆம் திகதி உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலுள்ள 2,000 பாலர் பாடசாலை ஆசிரியைகள் கௌரவிக்கப்படவிருப்பதாகக் கூறினார். இன, மத, மொழி பேதமின்றி தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் ஆசிரியர்கள் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வின் ஆரம்ப வைபவமாக இன்று திங்கட்கிழமை முதல் 3 நாட்களுக்கு கல்முனை வெஸ்லி கல்லூரி மண்டபத்தில் கண்காட்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தகவலையும் அவர் வெளியிட்டுள்ளார்.

**பெண்டுகள்...**

லைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவரின் சடலம் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டது. இவர் பெண்டுகள் சேனையைச் சேர்ந்த றூபன் (16) என அடையாளம் காணப்பட்டது.

இத்தாக்குதலில் மற்றுமொருவர் உயிரிழந்துள்ளதாகவும் இவரது சடலத்தை சகாக்கள் தூக்கி கொண்டு ஓடியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பலியான றூபனின் தயார் கருத்து தெரிவிக்கையில் தேசவிரோதக் கும்பலுடன் சேர்ந்து இயங்க வேண்டாம் என பலமுறை கூறியும் தனது மகன் சொல்கேட்கவில்லை எனத் தெரிவித்தார்.

**சம்பள...**

யில் நடைபெற்ற இந்த பேரணியில் பல்வேறு தொழிற்சங்க பிரதிநிதிகளும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு பற்றி தோட்ட நிர்வாகங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் இடமளிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இதில் முன்வைக்கப்பட்டுள்ளது. மல்லிகைப் பூ சந்தியிலிருந்து பஸ் நிலையம் வரை நடைபெற்ற இந்த பேரணியில் கலந்து கொண்ட தொழிலாளர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய வாசக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களையும் எழுப்பினார்கள்.

# பதுளை பரனகம தோட்டத்தில் குண்டு வெடித்ததில் இளைஞர் பலி!

(நமது நிருபர்)

பதுளை மாவட்டம் ஊவா பரனகமவிலுள்ள தோட்டமொன்றில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் தோட்டப் பகுதியைச் சேர்ந்த இளைஞரொருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

கொல்லப்பட்டவர் கேபாலன் விமலானந்தன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். காயமடைந்த கே.ஆனந்தகுமார் என்பவர் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பயிர்ச்செய்கைக்காக நிலத்தை மண்வெட்டியால் கொத்தி பண்படுத்திக் கொன்டிருந்த சமயம் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிபொருள் ஒன்று வெடித்து சிதறியதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக வெலிமட பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**விபத்தில்...**

டியில் சென்று கொண்டிருந்த வேளை தவறுதலாக விழுந்த போது துவிச்சக்கர வண்டியின் மிதிக்கும் பகுதி (பெடல்) பிரஸ்தாப நபரது கழுத்தில் பலமாக குத்தியதால் அதிகளவு இரத்தப் பெருக்கு ஏற்பட்டு ஸ்தலத்திலே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் திருக்கோயில், அக்கரைப்பற்று, தம்பிலுவில் பகுதிகளில் இடம்பெற்ற இரு வெவ்வேறு மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் அறுவர் காயமுற்று கல்முனை, மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**வாகரை...**

விடுதலைப் புலிகளினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் அந்த குழுவைச் சேர்ந்த நித்தி மற்றும் கஸ்ரோ ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். ஏனையோர் காயங்களுடன் தப்பியோடி விட்டார்கள். தொடரிலக்கம் அழிக்கப்பட்ட ரி-56 ரக துப்பாக்கியொன்று, ஆர்.பி.ஜி. எறிகணைகள், கிளைமோர் கண்ணிவெடிகள், வயர்கள், மற்றும் இராணுவ தளபாடங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

கொல்லப்பட்ட நித்தி பனிச்சங்கேணியிலுள்ள விடுதலைப் புலிகளின் முன்னணி காவல் நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆர்.பி.ஜி. தாக்குதல்களுக்கும், இதன் காரணமாக 50 வயதுடைய கணபதி காளிப்பிளை என்பவரின் மரணத்திற்கும், இப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் சம்பவமொன்றிற்கும் நேரடியாகப் பொறுப்பானவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர்கள் பிரதியமைச்சர்கள் மத்தியில் முறுகல் நிலை!

(நமது நிருபர்)

அரசாங்க அமைச்சர்கள் சிலருக்கும் பிரதியமைச்சர்கள் சிலருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டுள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

அமைச்சர்கள் சிலர் மீது வீணான குற்றச்சாட்டுகளை சுமத்தி வரும் இரண்டு பிரதியமைச்சர்கள் மேற்கொண்டதாக கூறப்படும் ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பாக தாம் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்க போவதாக அமைச்சர்கள் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட பிரதியமைச்சர்கள் இருவரும் அமைச்சர்களின் மீது குற்றங்களை சுமத்தி தமது குற்றங்களை மறைக்க முயல்வதாக அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் தொடர்பான குற்றச்சாட்டு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அது நாளைய தினம் ஜனாதிபதியிடம் சமர்பிக்கப்படும் எனவும் அமைச்சர்கள் குழு தெரிவித்துள்ளது.

**மட்டு...**

அரியநேத்திரன் ஈழநாதத்திற்கு தெரிவித்தார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தியும் இவ்வைபவத்தில் கலந்துகொள்ள மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**முற்பணம்...**

உணவுப் பொருட்கள் வழங்குதலில் காணப்படும் சீரற்ற தன்மையினால் இடையிடையே உணவு வழங்களை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. எண்ணெய், மீன்ரின் போன்ற பொருட்களை வழங்குவது தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இவற்றை ஏற்கனவே பெற்று வந்த சமையல்காரர்கள் இப்பொருட்களை பெற்றுத்தருமாறு அதிபர்களைத் தொல்லைப்படுத்துகின்றனர்.

சமையல் செய்வதற்கான உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பாடசாலை அதிபர்களால் முற் பணம் வழங்கி செலவு செய்யப்படுகின்றது. இப்பணம் உரிய வேளையில் அதிபர்களுக்கு கிடைப்பதில்லை 2004ஆம் ஆண்டு ஜுலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்குரிய கொடுப்பனவு இதுவரை அதிபர்களுக்கு வழங்கப்படவில்லை.

ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட பிரகாரம் சமையல் செய்வதற்கான சமையலறை மற்றும் களஞ்சிய வசதிகள் இதுவரை பாடசாலைகளில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. தற்காலிக கொட்டில்களில் சமையல் செய்யும் போது பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

இந்த உணவு வழங்கலில் மேற்பார்வை செய்தல், கணக்கு வைத்தல், பொருட்களை கொள்வனவு செய்தல், பாதுகாத்தல் போன்ற பல்வேறு கருமங்களில் ஈடுபடும் அதிபர்களுக்கு இது தொடர்பாக இது வரை எதுவித கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

எனவே இவைகளைக் கருத்திக் கொண்டு சமையல் பொருட்களை கொள்வனவு செய்ய செலவிடும் பணம் அதிபர்களுக்கு உரிய வேளையில் கிடைக்கவும், உணவுப் பொருட்களை சீராக வழங்கவும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளினால் எழுத்து மூலமான உறுதி மொழி எமக்குக் கிடைக்கும் வரை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தினை நிறுத்துவதெனத் தீர்மானித்துள்ளோம்.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 04. 10. 2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.